வெளிநாட்டுப் பிரயாணம்
திறமையான சேவைக்கும், நம்பிக்கைக்கும், செலவைக் குறைக்கவும்
MCT 1ஆம் ஒழுங்கை, மருத்திதுறை வீதி, யாழ்ப்பாணம்
Tele: 24791, 24836

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 1/-

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

ரெலிபோன்
ரெலெக்ஸ்
24 மணி நேர சேவை
பாதுகாப்பான இடம்
Safe Vehicle Parking
MCT 1ஆம் ஒழுங்கை, மருத்திதுறை வீதி, யாழ்ப்பாணம்
Tele: 24791, 24836

சுடர்: 1 யாழ்ப்பாணம் [illegible] ஆனி 05 வியாழக்கிழமை [illegible] 1406 [illegible] 10 (19-06-1986) UTHAYAN: A [illegible] TAMIL DAILY [illegible] 182

# தென்னிலங்கையில் வீதி ஆர்ப்பாட்டங்கள்

## தேர்தல் நடத்தக் கோரி சுதந்திரக்கட்சி நடத்தும்?

கொழும்பு, ஜூன் 19

நாட்டைப் பாதுகாக்க முடியாத நிலையில் அரசு திண்டாடுகிறது ஆகையால் ஜனாதிபதி தமது பதவியை ராஜினாமாச் செய்யவேண்டும். நாடாளுமன்றத்தைக் கலைக்கவேண்டும்

இவ்வாறு கோரி தென்னிலங்கையில் ஆர்ப்பாட்டங்களை நடத்துவது குறித்து சிறிலங்கா சுதந்திரக் கட்சி தீவிரமாக ஆராய்ந்து வருகிறது.

பொதுத் தேர்தலையும், ஜனாதிபதி தேர்தலையும் நடத்துமாறு கோரி தென்னிலங்கையின் பல பகுதிகளிலும் பிலிப்பீன்ஸ் பாணியில் தெரு ஆர்ப்பாட்டப் போராட்டத்தை நடத்துவது குறித்து அந்தக் கட்சி விரைவில் முடிவு செய்யும் எனச் சொல்லப்படுகிறது

பொதுத் தேர்தலையும், ஜனாதிபதித் தேர்தலையும் நடத்தக்கோரி வடக்கு, கிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளில் பிரசாரக் கூட்டங்களை நடத்த சுதந்திரக்கட்சி அண்மையில் முடிவு செய்தது.

அதன் பிரகாரம் பிரசாரக் கூட்டங்கள் இப்போது நடைபெற்று வருகின்றன. கடந்த வாரம் ஹக்மனையில் மிகப் பிரமாண்டமான கூட்டம் ஒன்றை சுதந்திரக்கட்சி நடத்தியது அதில் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவும் உரையாற்றினர்.

பிரசாரக் கூட்டங்களுக்கு அடுத்த (இரண்டாவது) கட்டமாக பொதுமக்களின் ஆதரவோடு தெரு ஆர்ப்பாட்டப் போராட்டங்கள் தொடங்கப்படும் என

(4ம் பக்கம் பார்க்க)

## இரகசிய விளக்கங்கள் நேற்று கையளிப்பு

கொழும்பு, ஜூன், 19

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக இலங்கை அரசின் இரகசிய விளக்கங்கள் இந்திய பிரதமர் ராஜீவ் காந்தியிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டன.

இரகசிய விளக்கங்கள் அடங்கிய இலங்கை ஜனாதிபதியின் செய்தியை இந்தியாவுக்கான இலங்கைத் தூதர் பேர்னட் திலகரத்தின இந்தியப் பிரமரிடம் நேற்று ஒப்படைத்தார்.

(உ)

# ஒவ்வொரு மாகாணத்துக்கும் தனித்தனி மாகாண சபைகள்

கொழும்பு, ஜூன் 19

* ஒவ்வொரு மாகாணத்துக்கும் தனித்தனி மாகாணசபை.
* தேர்தல் மூலம் தெரிவாகும் மாகாண சபைக்கு முதலமைச்சர், அமைச்சரவை – பெரும்பான்மை உறுப்பினர்களில் இருந்து தெரிவு செய்யப்படுவர்.
* மாகாண சபைக்கு வழங்கக்கூடிய அதிகாரங்கள், அதிகாரப் பரவலாக்கல் அம்சங்கள்.

### சர்வகட்சி மாநாட்டில் இதுவே முக்கிய யோசனை

மேற்கண்ட அம்சங்கள் அடங்கிய யோசனைகளை ஜூன் 25ல் ஆரம்பமாகவுள்ள அரசியல் கட்சிகள் மாநாட்டில் அரசு சமர்ப்பிக்கவுள்ளது.

இதற்கான அங்கீகாரத்தை அமைச்சரவை நேற்று வழங்கியது.

(இ-எ)

## சுதந்திரக் கட்சி பங்குபற்றாது

கொழும்பு ஜூன் 19

எதிர்வரும் 25 ஆம் திகதி நடைபெறும் சர்வகட்சி மாநாட்டில் பங்குபற்றுவதில்லை என சிறிலங்கா சுதந்திரக் கட்சி முடிவு செய்திருக்கிறது

எனினும் மாநாட்டிற்கு முன்னர் சுதந்திரக் கட்சித் தூதுக்குழு ஒன்று ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனவைச் சந்தித்துப் பேசும்.

(உ)

முச்சந்திமுரளி



நான் சொன்னேனே இல்லையோ! எப்பிடியும் மாவட்டம், மாசணமாய் மாறுமே தவிர அதுக்கு மேலே ஒரு இஞ்சியாவது ஏறிறதுக்கு ஜே. ஆர். உடன்பாரார் எண்டு... சரியாய் போச் செல்லே!

## கப்பல் கப்பலாக சிப்பாய்கள்!

### குடாநாடு வருகிறார்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 19

நேற்று அதிகாலை காரைநகர் கடற்பகுதி வழியாக கடற்படை முகாமுக்கு நூற்றுக் கணக்கான சிப்பாய்கள் இரண்டு கப்பல்களில் வந்து சேர்ந்தனர் அவர்களுடன் நவீன ரக வாகனங்கள் மூன்றும் வடக்கிற்குக் கொண்டுவரப்பட்டன

இதேபோன்று நேற்று அதிகாலை மற்றொரு கப்பலில் நூற்றுக்கணக்கான சிப்பாய்கள் காங்கேசன் துறைமுகம் வழியாக வடக்கிற்கு வந்து சேர்ந்தனர்.

இவர்களில் ஒருபகுதியினர் கடல்வழியாக உடனே மண்டைதீவு முகாமுக்குக் கொண்டு வரப்பட்டதாக நம்பகரமாக அறியவருகிறது.

(உ-5)

# இனக்கொலையிலிருந்து தமிழரை பாதுகாக்க ஐ. நா. உதவி தேவை

## சென். பற்றிக்ஸ் வைபவத்தில் யாழ் ஆயர்

யாழ்ப்பாணம், ஜூன் 19

இனப் படுகொலையில் இருந்து தமிழ் மக்களைக் காப்பாற்றும்படி ஐக்கிய நாடுகள் சபையைக் கோரவேண்டிய நெருக்கடியான காலக் கட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டு இருக்கிறோம்.

யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரி வருடாந்தப் பரிசளிப்பு விழா நேற்று மாலை நடைபெற்றது.

யாழ்ப்பாணம் ஆயர் வணக்கத்துக்குரிய கலாநிதி பி. தியோகுப்பிள்ளை பரிசளிப்புரையில் இவ்வாறு உருக்கமாக வேண்டுகோள் விடுத்தார்.

கல்லூரி அதிபர் ரெக்டர் பிரான்ஸிஸ் ஜோசப் வைபவத்துக்கு தலைமை வகித்தார்

யாழ் மாநகரசபை விசேட ஆணையாளர் திரு. சி. வி. கே சிவஞானம் சிறப்பு விருந்தினராக வைபவத்தில் கலந்து கொண்டார்.

யாழ் ஆயர் கலாநிதி தியோகுப்பிள்ளை தனது பரிசளிப்புரையில் தொடர்ந்து கூறியதாவது:

குண்டு வெடிப்பு, ஷெல் தாக்குதல் இயந்திரத்துப்பாக்கிச் சத்தம் ஆகியவை தமிழ் மக்களின் நாளாந்த அனுபவமாகிறது.

நிலத்திலிருந்தும், நீரிலிருந்தும், ஏன் வானத்திலிருந்தும் நூற்றுக் கணக்கான அமைதி விரும்பும் தமிழ் மக்கள் தாக்கப்படுகிறார்கள்.

தம்மீது மேற்கொள்ளப்படும்அனர்த்தங்களுக்கு அஞ்சித் தமது பாரம்பரிய தமிழ்ப் பிரதேசங்களில் இருந்து அகதிகளாக வெளியேறியுள்ள ஆயிரக் கணக்கான தமிழ் மக்களுக்கு உரிய நிவாரணம் கிடைப்பதாக இல்லை.

நாம் யாழ்ப்பாணத்தில் அனுபவிக்கும் அதே

(4 ம் பக்கம் பார்க்க)

# வடக்கில் மற்றும் ஒரு தாக்குதலுக்கு முஸ்தீபு

புதுடில்லி, ஜூன் 18

இலங்கையின் வடபகுதியில் மீண்டும் ஒரு தாக்குதலை நடத்துவதற்காக அரசபடைகள் விமான மூலமும் கடல் மூலமும் கொண்டு வந்து குவிக்கப்படுகின்றதாம்.

இப்படிச் செய்திகள் வந்துள்ளதாக இந்திய வானொலி அறிவித்தது.

வல்வெட்டித்துறை, காரைநகர்ப் பகுதிக் கடலில் பீரங்கிப் படகுகள் ரோந்து புரிகின்றன.

துருப்புக்கள் விமான மூலம் கொண்டு வந்து இறக்கப்படுகின்றனர்.

போராளிகளுக்கு எதிராக இன்னொரு தாக்குதலுக்கு அரசபடைகள் தயாராவதையே இது எடுத்துக் காட்டுகின்றது. இவ்வாறு அந்தச் செய்தி தெரிவித்தது.

இதேவேளை இந்தச் செய்தியை தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி மறுத்திருப்பதாகவும் இந்திய வானொலி மேலும் அறிவித்தது.

(இ-எ)

## வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் பென்ஷன்

யாழ்ப்பாணம், ஜூன் 19

* வங்கிக்கணக்கு மூலம் பென்ஷன் பெறுபவர்களுக்குரிய ஜூன் மாத பென்ஷன் நாளை 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் வழங்கப்படும்.
* இலங்கை வங்கிக் கச்சேரிக்கிளை மூலம் பென்ஷன் பெறுபவர்களுக்கு 21, 22 ஆம் (சனி ஞாயிறு) திகதிகளில் பென்ஷன் வழங்கப்படும்.
* அஞ்சல் அலுவலகங்கள் மூலம் பென்ஷன் பெறுபவர்களது ஜூன் மாதக் கொடுப்பனவு பற்றிய திகதிகள் வழமைபோல் பத்திரிகை மூலம் பிராந்திய தபால் அதிபரால் அறிவிக்கப்படும்.

"1986 ஜூன் மாதப் பென்ஷன் கொடுப்பனவு" என்ற தலைப்பில்

(4-ம் பக்கம் பார்க்க)

## கொட்டாஞ்சேனையில் 12 தமிழ் குடும்பங்களை குண்டர் விரட்டியடிப்பு

கொழும்பு, ஜூன்19

கொட்டாஞ்சேனை, குணநந்த மாவத்தையில் பலகை வீடுகளில் வசித்துவந்த 12 தமிழ்க் குடும்பங்கள் குண்டர்களினால்விரட்டப்பட்டன.

குண்டுவெடிப்பு, குண்டுப்புரளிகளினால் கொழும்பில் நிலவும் பதற்றத்தைப் பயன்படுத்தி,குண்டர்கள் இத்தமிழ்க்குடும்பங்களை அந்த வீடுகளில் இருந்து பலாத்காரமாக வெளியேற்றி விட்டனர்.

அந்தக் குடும்பங்களின் உடமைகள் சூறையாடப் பட்டுவிட்டன.

அவர்கள் ஆதரவற்ற நிலையில் கொட்டாஞ்சேனை மாரியம்மன் கோவிலிலும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அலுவலகத்திலும் அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ளனர்.

(இ-எ-2)

## கவனம்! போலி முத்திரைகள்!!

யாழ்ப்பாணம், ஜூன் 19

யாழ்ப்பாணக் குடாநாட்டில் போலி முத்திரைகள் பெருமளவில் விற்பனை செய்யப்படுகின்றன.

குறிப்பாக 50 ரூபா, 100 ரூபாவுக்குரிய முத்திரைகளே மிகப் பெருமளவில் விற்கப்படுவதாக அறியவந்துள்ளது.

அரசாங்க திணைக்களங்கள், நீதிமன்றங்களுக்கு பொதுமக்களால் ஒப்படைக்கப்படும் 50 ரூபா, 100 ரூபா முத்திரைகளில் ஐம்பது சதவீதத்திற்கு மேற்பட்டவை போலிகள் எனத் தெரியவந்துள்ளதாம்.

எனவே பொது மக்கள் இது விடயத்தில் மிகக் கவனமாக இருக்க வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளனர். (அ)

## காங்கேசனிலிருந்து கொழும்பு செல்லும் கப்பல்களுக்கு "தண்டனை"

கொழும்பு, ஜூன் 19

48 மணிநேரத்துக்கு கரையில் இருந்து 5 மைல் தூரத்தில் நிற்கவேண்டும்.

இந்த நிபந்தனை மனிதருக்கு அல்ல; காங்கேசன்துறையில் இருந்து பொருள்களை ஏற்றிக்கொண்டு கொழும்புத் துறைமுகம் வரும் கப்பல்களுக்கே விதிக்கப்பட்டுள்ளது.

கொழும்புத் துறைமுக நிர்வாகம் இந்த உத்தரவை விடுத்துள்ளது

பொருள்களுடன் வரும் கப்பல்களிலும் குண்டுகள் வைக்கப்பட்டிருக்கலாம் என்ற அச்சம் காரணமாகவே இந்த நிபந்

(4ம் பக்கம் பார்க்க)

# மன்னாரில் மோதல் சிப்பாய் பலி! பலர் காயம்

## போராளிகள் கடும் தாக்குதல்

யாழ்ப்பாணம் ஜூன், 19

மன்னாரில் நேற்று போராளிகள் - சிப்பாய்கள் பலத்த சண்டை நடைபெற்றது.

இந்தச் சண்டையில் ஒரு சிப்பாய் பலியானார். பலர் காயமடைந்தனர்.

இச்சம்பவம் பற்றி அறிய வருவதாவது;-

நேற்று மன்னார் முள்ளிக்குளம் பகுதியில் கவச வாகனங்கள் சகிதம் ரோந்து சென்ற சிப்பாய்களை போராளிகள் எதிர்த்துத் தாக்குதல் நடத்தினர்.

சிப்பாய்களும் பதில் தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படுகிறது

போராளிகளின் தாக்குதல்களினால் பல சிப்பாய்கள் மரணமடைந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது எனினும் இதனை ஊர்ஜிதப்படுத்தும் செய்

(4-ம் பக்கம் பார்க்க)

## கணவன் கைது: செய்தி கேட்டு மனைவி மரணம்

கொழும்பு, ஜூன் 19

கடைக்குப் போன தனது கணவன் அதிரடிப் படையினரால் கைதுசெய்யப்பட்டார் என்ற செய்தி கேட்டதுமே இளம்பெண் ஒருத்தி மயங்கி விழுந்து மரணமானார்.

மட்டக்களப்பு முனைக்காட்டுப் பகுதியில் இப் பரிதாப சம்பவம் இடம் பெற்றது.

கைதான முருகன் என்ற அந்தக் கிராமவாசி மறுநாளே அதிரடிப் பொலீஸாரினால் விடுவிக்கப்பட்டுவிட்டார்.

வீடு வந்த முருகன் மனைவியின் சடலத்தைத் தான் கண்டார்.

(உ-எ-2)

## சுபநேரம்

19 — 6 — 1986
வியாழக்கிழமை
சுபநேரம்:
7.24 முதல் 8 54 வரை
ராகுகாலம்:
1 24 முதல் 2 54 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
பிரதோஷ விரதம்

## தமிழரும் சிங்களவரும் ஒன்றுக வாழ்வது இனி முடியாத காரியம்

### நீலன் தெரிவித்த கருத்து

லண்டன், ஜூன், 18

நடக்கும் சம்பவங்களைப் பார்த்தால் தமிழரும் சிங்களவரும் இனி ஒன்றுக வாழ்வது முடியாத காரியம் என்றே எண்ணத் தோன்றுகின்றது.

இப்படி தமிழர் விடுதலைக்கூட்டணிப் பிரமுகரும் முன்னாள் வட்டுக்கோட்டை எம். பியுமான டாக்டர் நீலன் திருச்செல்வம் தெரிவித்ததாக லண்டன் ஒப்சேவர் செய்தி வெளியிட்டது

ஒப்சேவர் செய்தியாளர் ஜாக் என்பவர் அண்மையில் இலங்கை வந்திருந்தார். அச்சமயம் திருகோணமலைக்கும் விஜயஞ்செய்தார்.

டாக்டர் நீலன் திருச்செல்வத்தையும் அவர்

(4-ம் பக்கம் பார்க்க)

## திருமலை ஊரடங்கு

கொழும்பு, ஜூன், 19

திருகோணமலை நிர்வாக மாவட்டத்தில் நேற்று மாலை 7 மணிக்கு அமுலுக்கு வந்த ஊரடங்குச் சட்டம் இன்று காலை 5 மணிக்கு நீக்கப்பட்டது

(இ-எ)

## மகாநாயக்க தேரர்கள் எதிர்ப்பு

கொழும்பு, ஜூன் 19

சர்வகட்சி மாநாடு மீண்டும் நடத்தப்படுவதற்கு மல்வத்தை, அஸ்கிரிய மகாநாயக்கதேரர்கள் இருவரும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

பௌத்த பீடங்களைக் கேட்காமல் அரசாங்கம் சர்வகட்சி மாநாட்டை நடத்த முடிவு செய்துள்ளதை இரண்டு மகாநாயக்க தேரர்களும் கண்டித்துள்ளனர்.

(இ-எ-2)

## ஜனாதிபதி மாளிகைக்குள் நுழைய முயன்றவர்

கொழும்பு, ஜூன், 19

ஜனாதிபதி மாளிகைக்குள் நுழைய முயன்றதாகக் கூறப்படும் சிங்கள நபர் ஒருவரைச் சில தினங்களுக்கு முன்னர் பொலீஸார் கைது செய்தனர்.

அந்த நபரிடம் பிஸ்டல் ஒன்று, சில ரவைகள் இரும்புக்குழாய் ஒன்று ஆகியவை இருக்கக்கண்டு பிடிக்கப்பட்டன.

அந்த நபரைப் பொலிஸார் தீவிர விசாரணைக்கு உட்படுத்தியதைத் தொடர்ந்து மேலும் நால்வர் கைதாகினர். அவர்களில் ஒருவர் இராணுவக் கோப்ரல் ஆவர். விசாரணை தொடர்ந்து நடக்கிறது

(இ-எ-2)

## இணைப்பு அதிகாரியிடம் ஊரடங்கு அதிகாரம்

கொழும்பு, ஜூன், 19

கிளிநொச்சி மாவட்டத்தில் நிலைமைக்கு ஏற்ப ஊரடங்குச் சட்டத்தை அமுல் நடத்தும் அதிகாரம், கிளிநொச்சி இணைப்பு அதிகாரிக்கு வழங்கப்பட்டுள்ளது

கிளிநொச்சிக்குச் சென்று நிலைமையை நேரில் ஆராய்ந்த பின்னரே, கூட்டுத்தளபதி சிறில் ரணதுங்க இந்த அதிகாரத்தை கிளிநொச்சி இணைப்பு அதிகாரிக்கு வழங்கியிருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ-எ-2)

இளைய தலைமுறையின் இதயம் வரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்டைதீவு அகதிகளுக்கு இலவச உணவு வழங்குக

## பிரசைகள் குழு கோரிக்கை

மண்டைதீவு மே 19

மண்டைதீவுப்பகுதியை விட்டு வெளியேறி அகதியாக வேறிடங்களில் தஞ்சம் புகுந்திருக்கும் குடும்பங்களுக்கு அவ்விடங்களிலேயே இலவசமாக உணவுப் பொருள்கள் விநியோகிக்க வேண்டும்

தற்போது ஒருவார காலத்திற்கு தேவையான உணவுப்பொருள்கள் மட்டுமே வழங்கப்பட்டிருக்கிறது. தொடர்ந்தும் நிலைமைசீராகும்வரை இலவச உணவு வழங்கவேண்டும்.

மண்டைதீவுபிரசைகள் குழு யாழ். மாவட்ட சமூக சேவைகள் உதவிப் பணிப்பாளர் திருமதி. சிவசிதம்பரத்தை அவரது அலுவலகத்தில் சந்தித்து இப்படிக்கோரிக்கைவிடுத்திருக்கிறது.

வெளியிடங்களில் தஞ்சம் புகுந்திருக்கும் மேற்படி அகதிகள் வேலைவாய்ப்பு உதவி அரசாங்க அதிபருடன் தொடர்புகொண்டு இதுசம்பந்தமான கோரிக்கைக் கடிதத்தை தங்களுக்குஅனுப்பிவைத்தால் மேல் நடவடிக்கைகளைத் தாங்கள் எடுப்பதாகவும் அவர் உறுதியளித்தார்,

மண்டைதீவுப் பகுதியில் வாழ்வதற்கு மக்கள் பயப்படுகிறார்கள். அகதிகளாக வெளியேறி பசி பட்டினியை எதிர்நோக்குகிறார்கள் இப்படி பிரசைகள் குழுப் பிரதிநிதிகள் முறையீடு செய்தனர்.

இலவச உணவு விநியோகம் தொடர்பாக மேல்நடவடிக்கை தான் எடுப்பதற்கு வசதியாக மண்டைதீவை விட்டு இடம் பெயர்ந்தோர் தமது பெயர் விபரங்களை பிரசைகள் குழுச்செயலாளருக்கு அறிவிக்கும்படி கேட்கப்பட்டிருக்கிறது. (உ.-88)

## எதிர்ப்புத் தினம்

யாழ்ப்பாணம், ஜூன் 19

அரசின் 'அடக்குமுறை' இனப்படுகொலை ஆகியவற்றை உலகுக்குத் தெரியப்படுத்தவும் தமிழ் பேசும் மக்களின் ஏகோபித்த எதிர்ப்பைக் காட்டவும் ஜூலை மாதம் 25 ஆம் திகதி எதிர்ப்புத் தினம் ஒன்றை நடத்தத் தமிழ் பேசும் மக்கள் ஒடுக்கப்படுவதற்கு எதிரான போராட்டத்திற்கான இணைப்புக்குழு முடிவு செய்துள்ளது.

இதற்கான ஒத்துழைப்பை வெகுஜன இயக்கங்களிடம் இருந்து பெறுவது சம்பந்தமாக ஜூன் 22 காலை நல்லூர் இந்து விடுதியில் ஆலோசனைக் கூட்டம் ஒன்றை நடத்தவும் இணைப்புக்குழு தீர்மானித்துள்ளது. (உ-எ)

## ஜனநாயக கவுன்ஸில் கண்டனம்

கொழும்பு, ஜூன் 19

தமிழ் ஊழியர்களைக் கட்டாய லீவில் அரசாங்கம் அனுப்பிய செயலை லிபரல் ஜனநாயகக் கவுன்ஸில் வன்மையாகக் கண்டித்துள்ளது.

அது சம்பந்தமான உத்தரவை உடனடியாக வாபஸ் பெறும்படியும் கவுன்ஸில் அரசாங்கத்தைக் கேட்டுள்ளது

கவுன்ஸிலின் இணைச் செயலாளர் ஷாணக அமரதுங்க விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

## தேயிலை ஏற்றுமதிக்கு கட்டுப்பாடு

கொழும்பு, ஜூன் 19

இலங்கைத் தேயிலைச் சபையின் அத்தாட்சிப் பத்திரம் பெறாமல் வெளிநாடுகளுக்கு தேயிலை ஏற்றுமதி செய்யப்படக் கூடாது

ஏற்றுமதியாகும் தேயிலை முதலில் தேயிலை சபையினால் பரிசோதனைக்கு உட்படுத்தப் படும்.

அதன் பின்னர் திருப்தி தெரிவிக்கும் அத்தாட்சிப் பத்திரம் வழங்கப்படும். அதன் பின்னரே தேயிலையை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாம். (இ-எ-2)

## பாசறை விழாவால் ஏற்படும் நன்மை

வட்டுக்கோட்டை ஜூன் 19

நல்ல குடும்பத் தலைவியாக இருந்து குடும்பத்தைச் சீரியமுறையில் பேணிப் பாதுகாக்கும் திறமையும் நாட்டுக்குச் சேவை செய்யும் மனப்பாங்கும் ஒவ்வொரு பெண்ணுக்கும் ஏற்பட வேண்டும் என்ற நல்ல நோக்கத்துடனேயே பாசறை விழாவை நடத்துகின்றோம்

பண்டத்தரிப்பு வாழ்வொளி தலைமைத்துவப் பயிற்சிநிலையத்தில் நடைபெற்ற 6 ஆவது ஆண்டு யுவதிகள் பாசறை விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத் துணைத் தலைவர் டாக்டர் அல்போன்சஸ் அத்தனுசியார் உரையாற்றும் போது மேற்கண்டவாறு கூறினார்.

வாழ்வொளி தலைமைத்துவப் பயிற்சி நிலையத் தலைவி அருட் செல்வி எம் யூலாலி தலைமையில் இவ்விழா நடைபெற்றது (இ-ஓ-16)

## ஊழியர் அதிருப்தி

நெடுங்கேணி, ஜூன்19

தற்போது தனியார் கட்டடம் ஒன்றில் இயங்கிவரும் நெடுங்கேணி அஞ்சல் அலுவலகம் இன்னும் இடம் மாற்றப் படாதது குறித்து ஊழியர்கள் அதிருப்தி கொண்டுள்ளனர் என்று தெரிகிறது.

இந்தக் கட்டடமும் மிகவும் பழைய நிலையில் இருந்து வருவதும் புதிய இடம் ஒன்று இதற்காக தெரிவு செய்யப்பட்டிருப்பதும் குறிப்பிடத் தக்கது. (இ)

# எயர் லங்காவுக்கு நஷ்ட ஈடு கிடைத்தது

லண்டன், ஜூன். 19

கடந்த மாதம் 3 ஆம் திகதி கட்டுநாயகக்கா விமானநிலையத்தில் வெடி குண்டினால் தகர்க்கப்பட்ட ஏயர் லங்கா விமானத்துக்கான முழு நஷ்ட ஈட்டுத் தொகையையும் லண்டன் லொயிட்ஸ் காப்புறுதி நிறுவனம் வழங்கியுள்ளது

இந்த விபத்தில் பலியானவர்களின் குடும்பங்களுக்கான நஷ்ட ஈட்டுத் தொகையும் வழங்கப்படவிருக்கிறது.

எயர் லங்கா நிறுவனத்துக்கு கிடைத்த நஷ்ட ஈட்டுத்தொகையின் ஒரு பகுதியிலிருந்து மாதாந்தம் 1 லட்சத்து 80 ஆயிரம் அமெரிக்க டாலர் குத்தகைக்கு அமெரிக்க 'ரான்ஸ் எயர்' நிறுவனத்திடமிருந்து விமானம் ஒன்றை பெற்றுக்கொள்ள எயர்லங்கா முடிவு செய்துள்ளது. (உ-ஒ)

## நெல்வகைக்கு புதிய பெயர்

கிளிநொச்சி, ஜூன் 19

புதிய நெல் இனங்களின் வயதினை இலகுவில் விவசாயிகள் கண்டறியும் நோக்குடன் நெல்லினங்களின் பெயர்களில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக விவசாயத்திணைக்களம் அறிவித்துள்ளது.

முன்னர் பி. ஜி. 34-6 என்றவர்க்கப் பெயரைக் கொண்டு இவ் இனம் எத்தனை மாத இனம் எனக்கண்டு பிடிப்பது சிரமமாகவிருந்தது இதனால் தற்போது இனங்களின் வயதினை வைத்தும் ஆராய்ச்சி நிலையத்தின் பெயரினை வயதினை வைத்தும் 3 மாத நெல்லினத்திற்கு 300 என்னும் நான்கு மாத இனத்திற்கு 400 என்னும் மூன்றரைமாத இனத்திற்கு 350என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஓ)

## திருமலை புதிய இணைப்பு அதிகாரி ஜெயரத்தின

கொழும்பு, ஜூன் 19

திருகோணமலை மாவட்டத்தில் புதிய இணைப்பதிகாரியாக கேர்ணல் ஜெயரத்தின நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இது காலவரை மின்னேரியா பயிற்சி முகாம் பொறுப்பு அதிகாரியாக பணியாற்றி வந்தார்.

திருமலை இணைப்பதிகாரியாக இருந்த பிரிகேடியர் ஹர்ஷா குணரத்தின ஜூன் 9 ஆம் திகதி முதல் பாதுகாப்பு அமைச்சுக்கு இடமாற்றம் செய்யப்பட்டார். (இ-எ)

## நாடகக் கலைஞர் மன்ற 25 வருடப்பணி

### நிறைவு விழாவில் வித்தி உரை

காங்கேசன்துறை, ஜூன் 19

தமிழ் மக்களின் பாரம்பரியங்களை காக்கும் பணியில் ஈடுபடும் நாடகக் கலைமன்றங்கள் ஆரம்பிக்கப்பட்டு சில வருடங்களில் மூடப்படும் நிலையையே சர்வசாதாரணமாக காணக்கூடியதாக இருக்கிறது. அதற்கு மாறாக இந்த மன்றம் 25 வருடங்களாக நாடகக் கலைக்கு ஆற்றும் பணி பாராட்டுக்குரியது.

யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் சு. வித்தியானந்தன் காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுஸ்தாபன நாடகக் கலைஞர் மன்றத்தின் 25 ஆவது ஆண்டு விழாவில் கலந்துரையாற்றுகையிலேயே இப்படிக் கூறினார்.

கூட்டுத்தாபன பொது முகாமையாளர் திரு.கே நாகராசா தலைமையில் நடந்த விழாவில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது;

காங்கேசன்துறைப் பகுதி பல கலைஞர்களை எமக்கு அளித்துள்ளது.

நாடக, இசை, பாரம்பரிய கலைகள் விற்பன்னர்களை அளித்துள்ளது

நாடகக் கலைக்குகென தனி இடம் பிடித்துள்ள வி. வி. வைரமுத்து கலையுலகால் மறக்க முடியாதவர்.

இன்று நாடகக் கலையில் பெண்களின் ஈடுபடும் அதிகரித்துள்ளது.

ஆண்கள் பெண்வேடம் தாங்கும் நிலையில் இருந்து பெண்கள் ஆண் வேடம் தாங்கும் நிலையும் உருவாகியுள்ளது என்றார்.

இந்த நாடக மன்றத்தைச் சேர்ந்த திரு. மகேந்திரராசா, திரு. க. கணபதிப்பிள்ளை ஆகியோரும் உரையாற்றினார்கள்.

விழாவில் 'கழுத்து மாலை'' ''சத்தியவான் சாவித்திரி'' ஆகிய நாடகங்களும், மன்ற கலைஞர்களின் தனி நடிப்புகளும் இடம்பெற்றன. (இ-ஓ)


## பிரயாண ஒழுங்குகள்

- கனடா
- டென்மார்க்
- சவூதி அரேபியா

(1) கனடா, டென்மார்க் ஆகிய நாடுகளுக்கு நேரடிப் பிரயாண ஒழுங்குகள் உடன் செய்துதரப்படும்.

(2) சவூதி அரேபியாவுக்கு (Labourers) தொழிலாளர் பதவிக்கு செல்ல விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

(3) செல்ல விரும்புவோர் யூன் 25ஆம் திகதிக்கு முன்பாக தொடர்புகொள்ளவும்.

4) எமது பிரயாண முகவர் கனடா, டென்மார்க் ஆகிய நாடுகளுக்கு உங்களை உடன் அழைத்துச் செல்வார்

தொடர்பு: N. BALA

திருச்செல்லம் வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

பி.கு வழி இல: (764) பலாலி வீதி. கோண்டாவில் சந்திக்கு அருகாமை.


# மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

## இரண்டாம் தவணை பொது பரீட்சைகள் ஜூலையில் ஆரம்பம்

வட்டுக்கோட்டை ஜூன் 19

யாழ் மாவட்டத்திலுள்ள பாடசாலைகளுக்கான இரண்டாந் தவணைப் பரீட்சை ஜூலை மாதம் 21 ஆம் திகதி திங்கட் கிழமை ஆரம்பமாகவுள்ளது.

ஆண்டு 7 (ஆறும் வகுப்பு) தொடக்கம் ஆண்டு 11 வரையுள்ள மாணவர்களுக்கான பரீட்சைகள் ஜூலை மாதம் 21 ஆம் திகதி தொடக்கம் 25 ஆம் திகதி வரை நடைபெறும்.

ஆண்டு 4 (மூன்றும் வகுப்பு தொடக்கம் ஆறுவரையுள்ள மாணவர்களுக்கான பரீட்சைகள் ஜூலை 28 ஆம் திகதியும் 29 ஆம் திகதியும் நடைபெறும்-

இப்பரீட்சைக்கான சகல நடவடிக்கைகளையும் வட்டாரக் கல்வி அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். (இ—ஓ—16(

## நோன்மதி கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூன்19

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் யாழ் கிளையின் நோன்மதிக் கருத்தரங்கு ஜூன் 21 சனிக்கிழமை காலை நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

கிளைத்தலைவர் பேராசிரியர் நந்தி தலைமை வகிப்பார்.

'கிராமியக் கலைகள்' என்னும் பொருள் பற்றி கலாநிதி சி. மௌனகுரு உரை நிகழ்த்துவார். (இ - எ)

## செம்பியன்பற்று பொதுசன நூல்நிலையம்

பருத்தித்துறை ஜூன் 19

யாழ்ப்பாண அபிவிருத்திச் சபை செம்பியன் பற்று உப - அலுவலகத்திற்கான பொதுசன நூலக அடிக்கல் நடும் விழா அண்மையில் நடைபெற்றது.

இந் நூலகத்திற்கான அடிக்கல்லை செம்பியன் பற்று உப - அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு.வ. சி. கணேசன் நாட்டினார்.

இந்தநூலகம் செம்பியன் பற்று உப அலுவலக எல்லையினுள் நவீன வசதிகளுடன் அமைக்கப்படவுள்ளது.

இப்பொதுசன நூலகத்தை அமைப்பதற்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது' (இ - ஓ 109)

## கொப்புளாவுடை மயானம் அபிவிருத்தி

### நிதி உதவி வழங்கக்கோரிக்கை

காங்கேசன்துறை ஜூன்.19

பாதுகாப்பு சூழ்நிலை காரணமாக கீரிமலை செம்மன் வாய்க்கால் மயானம் பாவிக்க முடியாதுள்ளது.

அதற்கு அண்மையிலுள்ள கொப்புளாவுடை மயானத்தை பாவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் செம்மன் வாய்க்கால் மயான அபிவிருத்திக்கு முன்னர் ஒதுக்கப்பட்ட நிதியை கொப்புளாவுடை மயான அபிவிருத்திக்கு வழங்கும்படி அரசாங்கஅதிபரையும் உள்ளூராட்சி உதவி ஆணையாளரையும் கேட்கப் பட்டுள்ளது.

மயான அபிவிருத்தி பற்றி ஆலோசிப்பதற்கு மாவை- கொல்லங்கலட்டி கிராம முன்னேற்ற சங்க மண்டபத்தில் நடந்த விசேட கூட்டமொன்றிலேயே மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டது.

திரு எஸ். ஆர் சண்முகரத்தினம் தலைமையில் நடந்த மேற்படி கூட்டத்தில், மயான எல்லையை வரையறுத்தல், அபிவிருத்தி செய்தல், கிணறு திருத்தல் பற்றியும் ஆராயப்பட்டது. (இ-ஓ)

## யாழ்ப்பாணத்தில் முதலாம் திகதி தொடக்கம் அமுலான

# உள்ளூர் ஆசிரியர் இடமாற்றம்

மானிப்பாய். ஜூன் 19

1. 6. 86 முதல் செயல்படும்படியான உள்ளூர் ஆசிரிய இடமாற்ற அறிவித்தல் யாழ்ப்பாணம் கல்வி திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ளது பின்வரும் ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்றுள்ளனர்.

(ஏற்கனவே கற்பித்த பாடசாலைகளும் இடம் மாற்றம் பெற்ற பாடசாலைகளும்)

1 திரு எம். கணேசலிங்கம் (கணிதம்) குப்பிளான்விக்னேஸ்வரா — ஏழாலை சைவ மகாஜன.

2. திரு. கே நரேந்திரன் (விவசாயம்) மானிப்பாய் இந்து— நவாலி ம. வி. 3 நாள், திருஞானசம்பந்தர் வித்தி- 2 நாள்.

3. திருமதி ஆர். தணிகாசலம் (விஞ்ஞானம்) இணுவில் சைவ மகாஜன— ஏழாலை மகா வித்தியாலயம்

4 திருமதி ஜே. சிவலிங்கதாஸ்(விஞ்ஞானம்) ஆனைக்கோட்டை ரோ க. த. பாடசாலை — மானிப்பாய் புனித அன்னம்மா வித்தி

5 திரு செல்லத்துரை (ஆங்கிலம்) நவாலி மகா வித்தி ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலை.

6. செல்வி எஸ் செல்லத்துரை (விஞ்ஞானம்) தாவடி இந்து த. க. பாடசாலை - இராமநாதன் கல்லூரி

7. திரு. எஸ். ஞானச்சந்திரன் (வர்த்தகம்) சுன்னாகம் மயிலணி மகாவித்தி- - ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தி- 2 நாள், சுன்னாகம் மயிலணி ம. வி. 3 நாள்.

8. திரு. எஸ். துரைராசா (தமிழ்) கட்டுடை — சைவ வித்தி- சண்டிலிப்பாய் இந்து மகா வித்தியாலயம்.

9. திருமதி கே. அன்பு (தமிழ்) புனித யோன். பொஸ்கோ - கொழும்புத்துறை இந்து ம வி.

10 செல்வி ஆர். பொன்னம்பலம் (தமிழ்) வண். நாவலர் ம. வி- புனிதயோன் பொஸ்கோ

11. ஜனாப் எம். எம் அமீர் (தமிழ்) பெரிய கடை பாரதி பாஸ்ய வித்தி- மஸ்றூமன் த க பாடசாலை.

12 செல்வி சி. காராளகுலசிங்கம் (ஆங்கிலம்) கொட்டடி நமசிவாய வித்தி - புனித யேம்ஸ் மகளிர் கல்லூரி.

13. திரு. சி. வேலாயுதம் (தமிழ், -அதிபர் தரம் 5) கட்டைவேலி மெ. மி பாடசாலை நெல்லியடி மெ.மி பாடசாலை (அதிபரக)

14 திரு ஆ. மாணிக்கவாசகர் (தமிழ், அதிபர் தரம் 4) துன்னாலை காசிநாதர் வித்தி- கட்டைவேலி மெ. மி பாடசாலை (அதிபராக)

15 திருமதி வி. தேவச்சந்திரன் (வர்த்தக பட்டதாரி) கெருடாவில் இ. த. க பாடசாலை- நெல்லியடி மத்திய மகா வித்தி.

16. திருமதி கா. தவம் (தமிழ்) வல்வெட்டி விநாயகர்-வித்தி உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி.

17. திரு எஸ். கந்தசாமி (தமிழ்) உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் கல்லூரி- வல்வெட்டி விநாயகர் வித்தியாசாலை

18 திரு ஆர். இராசமணி (பி. எஸ். சி.) சிதம்பராகல்லூரி- வல்வெட்டி இ. த. க. பாடசாலை (பதிற்கடமை அதிபராக)

19 திரு என். யோகராசா (வர்த்தகபட்டதாரி) வட இந்துமகளிர் 3 நாள், தும்பளை சிவப்பிரகாசம் 2 நாள்- வட இந்து மகளிர் (முழுநேரக்கடமை)

20. திரு கே. வல்லிபுரநாதன் (வர்த்தகம்) தும்பளை சிவப்பிரகாசம் வித்தி- - தும்பளை சிவப்பிரகாசம் 3 நாள், பருத்தித்துறை புனித தோமாஸ் ரோ. க த. க. பாடசாலை 2 நாள்

21. பி தங்கவேலு (வர்த்தகம்) வல்வை சிவகுரு வித்தியாசாலை— வல்வை சிவகுரு வித்தி. 3 நாள், பொலிகண்டி இ. த. க பாடசாலை 2 நாள்.

22. செல்வி எல் செல்லையா (வர்த்தகம்)கதிஜா ம வி. - நல்லூர் சாதனா பாடசாலை.

23. திரு வி. பரிபூரணானந்த சர்மா (வர்த்தகம்) உடுவில் முருகமூர்த்தி. 3 நாள், நவாலி ம. வி 2 நாள் - உடுவில் முருக மூர்த்தி வித்தியாசாலை (முழுநேரக் கடமை)

24. திரு வி. பரமேஸ்வர சர்மா (வர்த்தகம்) கொக்குவில் மேற்கு ஞானபண்டித வித்தி— கொக்குவில் மேற்கு ஞானபண்டித வித்தி 3 நாள், நவாலி மகாவித்தி 2 நாள்.

25. திருமதி பி. சின்னமணி (வர்த்தகம்) புலோலி மெ மி. த க. பா. 3 நாள், அல்வாய் சின்னத்தம்பி 2 நாள்.

26. திரு. கே. திருச்செல்வவிநாயகமூர்த்தி (வர்த்தகம்) மாதகல் புனித சூசையப்பர்— இளவாலை மெய்கண்டான் 2 நாள் மாதகல் புனித சூசையப்பர் 3 நாள்.

27. திரு. என். தர்மலிங்கம் (வர்த்தகம்) தேவரையாளி இந்து 3 நாள், வதிரி இந்து 2 நாள் - கரணவாய் ம. வி.

28. திருமதி. எம். சிவபுண்ணியம் பிள்ளை (தமிழ்) இணுவில் சைவப் பிரகாச வித்தி - சங்கானை சிவப்பிரகாச வித்தியாசாலை.

29. திரு எம். கே. எம். மார்க்கண்டேயர் மரவேலை) ஒஸ்மானியா- கல்லூரி - கலாநிதி தியாகராசா ம. ம வி.

30 திரு. எஸ். பரமேஸ்வரன் (ஆங்கிலம்) அத்தியார் இந்துக் கல்லூரி - செங்குந்தா இந்துக் கல்லூரி.

31. திருமதி. பி இரத்தினம் (தமிழ்) வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தி - நீர்வேலி செ. சி. ரி. எம். எஸ். வித்தி

32 செல்வி. என். எஸ் செல்லையா (பி ஏ) கொட்டடி நமசிவாய வித்தி - திருக்குடும்ப கன்னியர் ம. வி.

33. செல்வி. வை. சந்தசாமி (சங்கீதம்) வட இந்து மகளிர் கல்லூரி — நல்லூர் தெற்கு விக்னேஸ்வரா வித்தி.

34 திருமதி அ. வேலுப்பிள்ளை (பி. எஸ். சி) மகாஜன கல்லூரி -. விக்டோரியாக் கல்லூரி

35 திருமதி கு. பத்மநாதன் (விஞ்ஞானம்) புனித ஜேம்ஸ் மகளிர் பாடசாலை - கோண்டாவில் பரஞ்சோதி வித்தி.

36. திருமதி. ரி செல்வரத்தினம் (பி எஸ் சி) தும்பளை சிவப்பிரகாச வித்தி - கெருடாவில் சைவ வித்தி.

37. திரு. வி லீலாரத்தினம் (கணிதம்) இமையாணன் அ. த பாடசாலை - கரவட்டி விக்கினேஸ்வரா வித்தி.

38. திருமதி எம். ஞானசேகரம் பிள்ளை (விஞ்ஞானம்) கலட்டி ரோ. க த க பாடசாலை- ஹாட்லிக் கல்லூரி.

39 திருமதிக. செல்வராசா(சங்கீதம்)இணுவில் சைவமகாஜன — ஜனசன் மார்க்க வித்தி.

40. திரு கே பத்மநாதன் (சங்கீதம்) சன்மார்க்க வித்தி-இணுவில் சைவமகாஜன வித்தி.

41. திரு எஸ். லிங்கநாதன் (விவசாயம்)மானிப்பாய் இந்து - அருணோதயா கல்லூரி.

42. திரு.ரி ஐ.சுப்பிரமணியம் (விவசாயம்) உடுவில் முருகமூர்த்தி வித்திமானிப்பாய்இந்துக் கல்லூரி

43. திரு தி ஆர். சத்தியமூர்த்தி (விவசாயம்) அருணோதயா கல்லூரி - வட்டு. இந்துக்கல்லூரி

44 திருமதி எஸ். இலட்சுமணசாமி (விவசாயம்) வட்டு இந்து 3 நாள் சில்லாலை ரோ. க. த பா 2நாள் - பண்டத்தரிப்பு ஜசிந்தா ரோ. க. பாடசாலை 3நாள், சில்லாலை ரோ. க. த.க.பாடசாலை 2 நாள்.

45. திரு எம். பரிமளசிங்சம் (விவசாயம்) மானிப்பாய் இந்துக்கல்லூரி - தெல்லிப்பளை யூனியன் கல்லூரி

46. திரு. கே செல்வக்குமாரன் (விவசாயம்) உடுவில் முருகமூர்த்தி வித்தி 3நாள் ஏழாலைஸ்ரீ முருகன் 2நாள் - உடுவில் முருகமூர்த்திவித்தி3நாள் கந்தரோடை கந்தையா தமிழ் வித்தியாசாலை 2நாள். (இ - 96)

## மக்கள் முகம்

### செல்வா ச. ச. நிலைய நிர்வாகிகள்

காங்கேசன்துறை, ஜூன் 19

மயிலிட்டி திருப்பூர் ஒன்றியம் செல்வா சனசமூக நிலையக் கூட்டம் நடைபெற்றபோது புது வருட நிர்வாகிகளாக கீழ்க்கண்டவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

காப்பாளர் திரு சி. இராமநாதன், திரு. சி. இராசதுரை, திரு அ. சதாசிவம்.

தலைவர்: க தங்கலிங்கம் உப-தலைவர் இ சிவானந்தலிங்கம், பொருளாளர் இ அருணாசலம், உப-பொருளாளர்: இ. செல்லக்கொடி, பொருளாளர்: மு. இரத்தினவடிவேல், வ. ஜெயபாலசிங்கம்.

5 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது. (- ஓ - 68)

### கன்னியர்மடம் அபிவிருத்தி நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 19

யாழ்ப்பாணம் கன்னியர்மடம் மகாவித்தியாசாலை அபிவிருத்திச் சபையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் கடந்த சனிக்கிழமை சங் சகோதரி எம். தியோபிளி தலைமையில் வித்தியாசாலை மண்டபத்தில் நடந்தது.

பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவானார்கள்.

தலைவர்: சகோ. எம். தியோபிளி உப-தலைவர் திரு. அந்தோனிமுத்து இணைச் செயலாளர்கள் றொலாபற்றிக் சுல்தான், பொருளாளர் திருமதி மகாலிங்கசிவம்

ஆசிரியர் குழுவை ஐவர் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள். பெற்றோர் குழுவில் 14 பேர் நிர்வாகிகளாகவுள்ளனர். (ஒ)

## நாவற்குழியில் கறுப்புச் சட்டையர்

யாழ்ப்பாணம், ஜூன் 19

நாவற்குழி இராணுவ முகாமில் மேலும் கறுப்புச் சட்டையினர் இறக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது,

அண்மைக் காலமாக யாழ் குடாநாட்டின் பல இராணுவ முகாம்களில் சீருடையினர் குவிக்கப்பட்டு வருகின்றனர். அதன் ஒருபகுதியாகவே நாவற்குழி முகாமிலும் கறுப்புச் சட்டையினர் ஹெலிக்கொப்டர் மூலம் கொண்டுவந்து இறக்கப்பட்டனர். (உ-10)


## தேவை

புது வாழ்வு நிலையத்தினரால் வட்டுக்கோட்டையில் நடத்தப்படஇருக்கும் கடையினைப் பொறுப்பேற்க இத்துறையில் அனுபவமுள்ள பெண் தேவை. உணவும் தங்குமிடமும் போதகர் வீட்டில் வழங்கப்படும். வெள்ளி 20-06-86 முற்பகல் 9 12 மணிக்கிடையில் போதகர், இல. 6, சுவாட்ஸ் லேன், சுண்டிக்குளி, யாழ்ப்பாணத்தில் சந்திக்கவும். அருட்திரு. வீ ஜே. சீவரத்தினம், புது வாழ்வு நிலையம், ஆனைக்கோட்டை.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதய சங்கற்பம்

உலகம் கடினமான இரும்பைப் போன்றது அதன்மீது விடாமல் தொடர்ந்து ஓங்கி அடித்துத்தான் மக்கள் தங்களுக்கு என்று ஓரிடத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

—எமர்ஸன்.


உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல, 15 2வது ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம், 19-06-86 தொலைபேசி 24085 24073 த. பெ. 13


# சர்வகட்சி மாநாடும் தமிழர் கட்சிகளும்

இலங்கை அரசாங்கம் கூட்டும் சர்வகட்சி மாநாடு இம்மாதம் 25 ஆம் திகதி நடக்கப் போகிறது அதில் கலந்துகொள்ளுமாறு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுக்கு அழைப்புகள் அனுப்பப்பட்டுள்ளன.

அந்த வகையில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது அழைப்பை ஏற்றுக் கூட்டணி மாநாட்டில் பங்குபற்றுமா? இப்படி ஒரு கேள்வி இப்போது எழுந்துள்ளது.

மாநாட்டில் கலந்து கொள்வதா இல்லையா என்பதை கட்சியின் அரசியல் விவகாரக் குழுதான் முடிவு செய்யும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் கொழும்பில் உள்ள சில கூட்டணிப் பிரமுகர்களை ஆதாரங்காட்டி, கூட்டணி மாநாட்டில் கலந்து கொள்ளும் சாத்தியம் இருப்பதாக தலைநகரில் உள்ள அரசு ஆதரவுடைய பத்திரிகைகள் செய்திகளை வெளியிட்டுள்ளன. அது அரசாங்கத்தின் தூண்டுதலில் செய்யப்பட்ட வம்புத்தனமாகவும் இருக்கலாம். கூட்டணியினரின் மனதில் ஒரு குழப்ப நிலையை உண்டாக்கி, அதனைத் தமக்குச் சாதகமாக்கிக் கொள்ளவும் இப்படியான 'திருவிளையாடல்' நடக்கக் கூடும்!

எது எப்படி இருப்பினும் கூட்டணி சர்வகட்சி மாநாட்டில் கலந்து கொள்ளலாமா என்பது தான் முக்கிய கேள்வி.

1984 இல் ஒரு சர்வகட்சி மாநாட்டை அரசாங்கம் நடத்தியது அந்த வருடம் சர்வகட்சி மாநாட்டு ஆண்டாகவே இருந்தது. அதாவது ஆண்டு முழுவதும் மாநாடு நடந்தது. ஆனால் எவ்வித தீர்வோ, திட்டமோ காணுமல் திடுதிப்பென அப்படியே அந்த மாநாடு முறிந்துவிட்டது.

இந்திரா காந்தியையும், அவரின் மரணத்தின் பின்னர் இந்தியாவையும் ஏமாற்றி விட்ட சாதனையுடன், திருப்தியுடன் மாநாடு அவ்வாறு முடிந்து போனது; இல்லை முறிந்து போனது.

திரும்பவும் சர்வகட்சி மாநாடு இந்தமாதம் நடக்கப் போகிறது. இனப்பிரச்சினை விவகாரத்தில் இங்குள்ள அரசியல் கட்சிகளின் ஆலோசனையையும், ஒத்துழைப்பையும் பெறுவதற்காகத் தான் மாநாடு கூட்டப்படுவதாக அரசாங்கம் சொல்லுகிறது.

1984 இலும் இப்படித் தான் கூறப்பட்டது. இம்முறை மாகாண சபைத் திட்டத்தை அரசாங்கம் தயாரித்து வைத்திருக்கிறது. அதனை வழங்குவதற்கு எதிர்ப்புந் தெரிவிக்காதீர்கள் என்று தென்னிலங்கைக் கட்சிகளிடம் கேட்கப் போகிறது. எதிரணியினர் எதிர்ப்புத் தெரிவித்தாலும் அது கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

ஒரு தலைப்பட்சமாக அதனை வழங்குவதாக இலங்கை அரசாங்கம் அறிவிக்கும். அவ்வளவு தான்!

வடக்கு, கிழக்கு இணைப்பு? அதுவா, அதைப் பற்றிப் பேசவே கூடாது என்று அரசாங்கம் சொல்லி வருகிறது. அவ்வாருயின் தமிழர் கூட்டணி மட்டுமன்றி வேறு எந்தத் தமிழர் கட்சிகளாவது மாநாட்டில் கலந்துகொள்வதால் ஆகப்போவது என்ன? கிடைக்கப் போவதுஎன்ன?

தமிழர் கூட்டணியின் நிலை இன்னும் வேறுபட்டது. ஏற்கனவே பல தடவைகள் அரசாங்கத்தினுல் ஏமாற்றப்பட்ட அனுபவம் அதற்கு உண்டு. மாவட்ட சபையை பின்னர் அதிக அதிகாரங்கள் கொண்ட சபையாக்குவோம் என்று அரசாங்கம் கூறியதை நம்பி, அந்தச் சபையை ஏற்று, மூக்குடைபட்ட அனுபவம் தாராளம். அதனுல் இளைஞர்களின் பலத்த எதிர்ப்பைப் பெற்றுச் "சூடு கண்ட" அனுபவமும் உண்டு.

அந்த அனுபவங்களின் விளைவாக, இனப்பிரச்சினை சம்பந்தமான தீர்வு எதையும் இந்தியாவின் ஆற்றுப்படுத்தல் மூலமே பெறலாம் என்ற நம்பிக்கையோடு இருப்பது கூட்டணி. கூட்டணித் தலைவர்கள் அதனையே அடிக்கடி சொல்லியும் வருகிறுர்கள். அது சார்ந்தே செயற்பட்டும் வருகிறுர்கள்.

இலங்கை அரசாங்கம், இந்தியாவிடம் ஒரு திட்டத்தைச் சமர்ப்பித்துவிட்டு, அது குறித்து தென் இலங்கைக் கட்சிகளுடன் ஆராயும் மாநாட்டுக்கு கூட்டணி போகவேண்டிய அவசரம் எதுவும் இருப்பதாக எமக்குத் தெரியவில்லை.

இப்போதைய சூழ்நிலையில் இந்தியா அனுமதி தந்தாலும் கூட்டணி சர்வகட்சி மாநாட்டுக்கு போவது விரும்பத்தக்கதல்ல.

இலங்கை அரசமைப்பின் ஆறுவது சட்டத் திருத்தம் ரத்துச் செய்யப்படும் வரை எந்தத் தமிழ் அரசியல் கட்சியும் அரசாங்கம் கூட்டும் அரசியல் மாநாடு எதற்கும் போகக்கூடாது. இல்லையென்று சென்றுல் அவர்கள் வெறும் "சோணகிரி"கள் ஆவார்கள். தன்மானம் இல்லாத தமிழர் ஆவார்கள் சுய நலம் எதையோ கருதி தமிழ் மக்கள் நலனை விற்ற துரோகிகள் ஆவார்கள்.

## மின இணைப்புக்கு நிதி ஒதுக்கீடு

வேலணை ஜூன் 19 பன்முப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் கீழ் இந்த ஆண்டு வேலணை கிழக்கு, மேற்கு கிராமத்திற்கு மின்சார இணைப்புக்கென ஒரு இலட்சத்து 58 ஆயிரத்து 676 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இப்பணத்தில் ஒரு இலட்சத்து 34 ஆயிரத்து 285ரூபா வேலணைமேற்கு கெட்டில் மாதிரிக்கிராம வீதிக்கும் மிகுதி 24ஆயிரத்து 391 ரூபா வேலணை கிழக்கு கிராமோதய வீதிக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன.

இவ் ஒதுக்கீட்டினுல் கெட்டில் மாதிரிக் கிராம மக்கள் பெரிதும் நன்மையடைவார்கள்.

(உ)

# வெளி உலகில்

## நகைக்கடனுக்கு ரூ 300 கோடி

சென்னை, ஜூன் 13

தமிழ்நாட்டில் இவ்வாண்டு கூட்டுறவு வங்கிகள் மூலம் 300 கோடி ரூபா நகைக்கடன் வழங்கப்படும்.

இதுவரை 5000 ரூபாவாக இருந்த நகைக்கடன் வரம்பு தற்பொழுது 6000 ரூபா ஆக உயர்த்தப் பட்டுள்ளது.

நகைக் கடன் மீதான வட்டி வீதமும் 14 வீதத்திலிருந்து 16 வீதமாக அதிகரிக்கப் பட்டுள்ளது.

பவுணுக்கு ஆயிரம் ரூபா வரை நகைக்கடன் வழங்கப்படுகின்றது.

(இ-ஒ)

## குழந்தைகள் வாரியத்துக்கு ராஜீவ் தலைவர்

புதுடில்லி, ஜூன் 18

மனிதவள அபிவிருத்தி அமைச்சின் பெண்கள் மற்றும் குழந்தைகள் வளர்ச்சித் துறையின் கீழ் உள்ள தேசிய குழந்தைகள் வாரியம் பிரதம மந்திரி திரு ராஜீவ் காந்தியைத் தலைவராகக் கொண்டு மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

பல அமைச்சர்கள் இந்த வாரியத்தில் அங்கம் வகிப்பார்கள்.

நாகலாந்து, மேற்கு வங்காளம், பஞ்சாப், ராஜஸ்தான், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களின் குழந்தை நலன்கள் துறையை கவனிக்கும் அமைச்சர்களும் இதில் அங்கத்தவர்களாக இருப்பார்கள்.

(இ-ஒ)

## பொக்கிஷ பேழை கண்டுபிடிப்பு

சேலம், ஜூன் 18

சுமார் 2,500 ஆண்டுகளுக்கு முற்பட்டதெனக் கருதப்படும் பொக்கிஷப் பேழையொன்று சேலம் பகுதியில் கண்டெடுக்கப் பட்டுள்ளது.

சேலத்தில் விவசாயி ஒருவர் தமது வயலில் வேலைசெய்து கொண்டிருக்கும்பொழுது இந்தப் பேழையை கண்டெடுத்தார்.

5 அடி உயரமான இந்தப் பேழைக்குள் எலும்புக் கூடுகளும் தங்கம், வெள்ளி போன்ற உலோகங்களும் விலை மதிப்புள்ள ரத்தினக்கற்களும் காணப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

## செங்கோட்டையில் வாஞ்சிநாதன் நினைவு நாள்

சென்னை, ஜூன்18

விடுதலை வீரர் வாஞ்சிநாதனின் 75 ஆவது நினைவு நாள் செங்கோட்டையில் அனுசரிக்கப் பட்டது.

தமிழக அரசு சார்பில் நடந்த இந்த விழாவில் தமிழக செய்தி, அறநிலைத் துறை அமைச்சர் திரு ஆர்.எம்.வீரப்பன், வாஞ்சிநாதனின் உருவச்சிலையைத்திறந்து வைத்தார்.

அவர் தமிழ் நாடு முதல் அமைச்சர் திரு. எம் ஜி. ராமச்சந்திரன் சார்பில் வாஞ்சிநாதனின் சகோதரர் திரு கோபால கிருஷ்ணருக்கு 5000 ரூபா வழங்கினுர்.

வாஞ்சிநாதனின் நினைவை ஒட்டி சிறப்பு முத்திரை ஒன்று இந்திய அரசால் வெளியிடப் பட்டது.

(இ-ஒ)

# இந்திய ராஜ்ய சபைத் தேர்தல்

# இ. காங்கிரஸ் தலைவருக்கு வேட்பு மனு வழங்கவில்லை

புதுடில்லி, ஜூன் 18

இந்தியாவின் ராஜ்ய சபை உறுப்பினர் தேர்தலுக்கான இந்திரா காங்கிரஸ் வேட்பாளர் பட்டியலில் இந்திரா காங்கிரஸ் கட்சியின் தலைவர் கமலபதி திரிபாதியின் பெயர் இடம்பெறவில்லை.

ஈராண்டுக்கு ஒருமுறை தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களுக்கான தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பாளர்கள் நியமனப்பத்திரங்கள் சமர்ப்பிக்கும் கடைசித் திகதி கடந்த புதன்கிழமையுடன் முடிவடைந்தது.

இந்திரா காங்கிரஸ் வேட்பாளர் பட்டியலில் கட்சித் தலைவர் கமலபதி திரிபாதியின் பெயர் இடம் பெறவில்லை.

இவர் உத்தரப்பிரதேசத்தில் இருந்து நீண்ட காலமாக இந்திரா காங்கிரஸ் சார்பில் ராஜ்ய சபா உறுப்பினராக இருந்து வந்தார்.

கட்சி நடவடிக்கைகள் சம்பந்தமாக பிரதமர் ராஜீவ்காந்திக்கும் திரு. கமலபதி திரிபாதிக்கும் இடையே அண்மைக் காலமாக கருத்து வேற்றுமை நிலவிவந்தது.

7 மாநிலங்களில் இருந்து 21 உறுப்பினர்களை ராஜ்யசபாவிற்குத் தெரிவு செய்வதற்காக இத்தேர்தல் நடைபெறுகிறது.

(—எ)

## குழாய் மூலம் தபால் விநியோகம்

பாரிஸ், ஜூன் 18

பாரிஸ்நகரில் குழாய் வழியாக அஞ்சல் சேவை நடைபெறஉள்ளது.

குழாயில் கடிதங்களை போட்டு பட்டனை அழுத்தினுல் காற்று அழுத்தத்தினுல் உறிஞ்சப்பட்டுக் கடிதங்கள் அதிவேகத்தில் நகரின் பல பகுதிகளையும் அடைந்து விடும்.

இந்த குழாய்கள் நகரில் உள்ள தபால் நிலையங்கள் அனைத்தையும் இணைக்கத்தக்கதாக அமைக்கப் படும்.

(இ-ஒ-5)

## ஆள் அடையாளம் காணப்பட்டார்

இஸ்லாமாபாத்.ஜூன் 18

சண்டிகாரிலிருந்து லாகூர் வழியாக டுபாய் சென்றுகொண்டிருந்த இந்தியன் எயர்லைன்ஸ் விமானம் ஒன்றை 1984 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் கடத்திய ஏழு பேரை டுபாயிலுள்ள இந்திய தூதரகத்தின் உயர் அதிகாரி ஒருவர் அடையாளம்காட்டினுர்.

கடத்தல்காரர்களை இந்திய உயர் ஸ்தானிகரின் வேண்டுதலின் பெயரில் டுபாய் அரசு இந்திய அரசிடம் ஒப்படைத்துள்ளது.

(இ-ஒ)

## அமெரிக்க பிரதம நீதியரசர் ராஜினுமா

வாஷிங்டன், ஜூன்18

அமெரிக்க உயர் நீதிமன்றத்தின் பிரதம நீதியரசர் திரு. வரன் பேகர் தமது பதவியை ராஜினுமாச் செய்துள்ளார்.

அமெரிக்காவின் மிக உயர்ந்த பதவியை கடந்த 17 வருடங்களாக அலங்கரித்து வந்த 75 வயது நிரம்பிய வரன் பேகர் தமது ராஜினுமாவிற்கான காரணத்தைத் தெரிவிக்கவில்லை.

(இ-ஒ)

## இந்தியாவில் தேசிய வங்கிக்கொள்கை

### அனைத்து வங்கிகள் கோரிக்கை

சென்னை, ஜூன் 18

தேசிய வங்கிக் கொள்கை ஒன்றையும் தேசியக் கடன் திட்டம் ஒன்றையும் ஏற்படுத்த வேண்டும் என்று இந்திய மத்திய அரசை அனைத்து இந்திய வங்கி ஊழியர் சங்கம் கேட்டுள்ளது.

அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகளின் மூல ஆதாரங்களை அத்தியாவசியத் தேவைகளின் படி ஒன்று திரட்டிய மைத்து பிராந்திய சமசீரின்மையை இதனுல் போக்க முடியும் என கருதப்படுகிறன்து.

அரசுடமை வங்கிகள் நாடாளுமன்றத்துக்கு கணக்குக் காட்டுபவையாக இருக்க வேண்டும் என்றும் அரசுடமை வங்கிகளின் வேலைத்திறமையைக் கண்காணித்து அவைகளைநெறிப்படுத்த தொழில் வளர்ச்சி வங்கி மாதிரி ஓர் அமைப்பு அவசியமாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-ஒ)

## பாடசாலைகள் மீண்டும் இயங்குகின்றன

### வெளியூர் ஆசிரியர் இல்லை

புங்குடுதீவு, ஜூன் 19

புங்குடுதீவு கல்வி வட்டாரத்தைச் சேர்ந்த பாடசாலைகள் மீண்டும் வழமைபோல் இயங்குகின்றன.

எனினும் வெளியூர் ஆசிரியர்கள் பலர் இதுவரை கடமைக்குத் திரும்பவில்லை.

இது குறித்து இப்பகுப் பெற்றோர்கள் பெரும் அதிருப்தி தெரிவிக்கிறுர்கள்.

மாணவர்களின் கல்வி நிலை பெரிதும் பாதிப்புக்குள்ளாகியுள்ளதால் யாழ் கல்வித்திணைக்களம் இது குறித்து உறுதியான நடவடிக்கை எடுத்து மாணவர்களின் கல்வி நிலையைப் பேண வேண்டுமென இப்பகுதிப் பெற்றோர்கள். கோருகிறுர்கள்.

(இ-131)

## கொழும்புத் துறை இந்து பொருட்காட்சி

யாழ்ப்பாணம், ஜூன்19

கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலத்தில் கல்விப் பொருட்காட்சி நாளை வெள்ளிக்கிழமை காலை 9-00 மணி தொடக்கம் பிற்பகல் 4-00 மணி வரை நடைபெறும்.

யாழ்ப்பாண வட்டாரக் கல்வி அதிகாரி திரு. இ. சிவானந்தன். பொருட் காட்சியைத் திறந்து வைப்பார்.(இ)

## ஏழுபேர் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 19

மட்டக்களப்பு செங்கலடிப் பகுதியில் நேற்று ரோந்து சுற்றிய சிப்பாய்கள் ஏழு பேரைக் கைது செய்து தங்களுடன் அழைத்துச் சென்றதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மட்டக்களப்பின் வேறு பகுதிகளிலும் ரோந்து நடத்திய சிப்பாய்கள் வேறு பலரையும் கைது செய்ததாக தெரியவருகிறது.

(-10)

### பார்வை குறைந்தோருக்கு

## இலவச கண்ணாடி

### அச்சுவேலி லயன்ஸ் ஏற்பாடு

பலாலி, ஜூன் 19

அச்சுவேலி லயன்ஸ் கழகம் கண்பார்வை இழந்தவர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடி வழங்கவுள்ளது.

இதற்காக இலவச கண்பரிசோதனை எதிர் வரும் 29 ஆம் திகதிகாலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையில் அச்சுவேலி தங்கம் வைத்தியசாலையில் நடத்தப் படும்.

டாக்டர் திருமதி பஞ்சலிங்கத்தின் உதவியுடன் யாழ் பிரதான வீதியிலுள்ள திரு எஸ். எம். பெர்னண்டோ (கண்பரிசோதனையாளர்) பரிசோதனையை மேற்கொள்வார்கள்

இலவச பரிசோதனையில் பங்கு கொள்ளமுடியாதவர்கள் தனிப்பட்ட முறையில் கண்பரிசோதனை செய்து [illegible] முதலாம் திகதிக்குமுன்பு கழகச் செயலாளரிடம் அறிக்கை சமர்பிக்க வேண்டுமென கழகச் செயலாளர் திரு. க. கனகராஜா தெரிவித்துள்ளார்.

விண்ணப்பித்துள்ள தகுதியான அனைவருக்கும் கண்ணாடி வழங்க முடியும் என அச்சுவேலி லயன்ஸ் கழகத் தலைவர் பேராசிரியர் நா. பாலகிருஷ்ணன் நம்பிக்கை தெரிவித்தார்.

(இ-1.9)

# கோட்டைக்குள் சிப்பாய்கள் வீதிகளில் போராளிகள்

## இரு தரப்பினரையும் வெளியேற்ற முடியாது என்கிறுர் கொழும்புப் பத்திரிகையாளர்

யாழ் குடா நாட்டில் அரச படைகள் மே மாதம் நடத்திய 'ஆறு நாள் யுத்தம்' பற்றி லங்கா கார்டியன் ஆங்கில வார சஞ்சிகையில் அதன் ஆசிரியர் மேர்வின் டி சில்வா எழுதிய கட்டுரையின் தமிழாக்கம் இங்கு பிரசுரமாகின்றது.

ஆம்! நாம் அனைவரும் இப்போது இராணுவ நிபுணர்களாகி விட்டோம்.

வடபகுதியில் அண்மையில் நடந்த இராணுவ நடவடிக்கையை வெளிநாட்டு தொடர்பு சாதனங்கள் "6 நாள் சண்டை'' என்று வர்ணித்தன.

இலங்கை அரசாங்கமோ 'துருப்புக்களின் பரிமாற்றம்'' என்று கூறியது.

அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள 'டெய்லி நியூஸ் நாளிதழ் 'பாரிய இராணுவத் தாக்குதல்' என்று தெரிவித்தது.

'சன்' குறூப் பத்திரிகைகள் "குறுகிய கால மன்னிப்புக் கோரல்'' என்று வர்ணித்தது.

உண்மை என்னவென்றுல் நாம் எல்லாரும் கற்றுக் குட்டிகள் கூட்டம் சிப்பாய்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள விஷயங்கள் பற்றி கதிரைகளில் இருந்து தந்திரோபாயங்களை தயாரிக்கும் கூட்டம் நாம்.

ஆனாலும் குழப்ப நிலையை உருவாக்க இராணுவத்தினரும் உதவினர்.

இராணுவத்தினர் சார்பில் செய்தியாளர்களுக்கு தெரிவிக்கப்பட்ட தகவல்கள் மே 20 இல் நாடாளுமன்றத்தில் அமைச்சர் அத்துலத்முதலி தெரிவித்த கூற்றுடன் ஒத்துப் போகவில்லை.

வெளி நாட்டுச் செய்தியாளர்களுக்குத் தகவல் தெரிவிப்பது படையினருக்குப் புதிய அனுபவம் இராணுவத்தினரின் பொதுசனத் தொடர்பு கருமங்கள் தற்போது புனரமைக்கப்பட்டு விட்டன.

"துருப்புக்களின் பரிமாற்றம்'' என்று கூறிய அரசு தரப்பில் கீழ் வரும் தகவல்கள் தெரிவிக்கப்பட்டன

1. வடபகுதி முகாம்களில், குறிப்பாக கோட்டை முகாமில் உள்ள சிப்பாய்கள் குறிப்பிட்ட காலத்துக்கு மேல் சேவை செய்து விட்டார்கள்.

அவர்களுக்குப் பதில் புதிய துருப்புக்களை அனுப்புவது தான் அக்காலத்தில் இம்பெற்றது இதற்கு ஒரு பட்டாலியனே திருப்பி அழைக்க வேண்டி ஏற்பட்டது.

2. துருப்புக்களை பாதுகாப்பாகத் திருப்பி அழைப்பது கடல், ஆகாய வழியால் தான் செய்யமுடியும்.

இதற்கு காரைநகர் கடற்படை முகாம், பலாலி விமானத் தளம், அவற்றைச் சுற்றியுள்ள பிரதேசம் பாதுகாப்பாக இருக்க வேண்டும்.

வயாவிளான், ஊர்காவற்றுறை ஆகிய முகாம்கள் அமைக்கப் பட்டவுடன் அந்த இரண்டு நோக்கங்களும் நிறைவேற்றப்பட்டன.

நோக்கங்கள் நிறைவேற்றப்பட்ட பின்னர் ஊர்காவற்றுறை முகாம் மூடப்பட்டது.

3 மூன்றுவது நடவடிக்கை ஆனையிறவூடாக துருப்புக்கள் நகர்த்தப்பட்டமை. இது மூன்று கோணத் தாக்குதல் அல்ல 30, 40 வாகனங்களுடன் வந்த 1000 துருப்புக்களின் முன்னேற்றம் இடையில் நிறுத்தப்பட்டது.

இது ஒரு தற்காலிக தோல்வி அல்ல என்று சொன்னுர் இராணுவப் பேச்சாளர் ஒருவர்

புலிகள் துருப்புக்களை எதிர்த்துப் போராடினர் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த 8 போராளிகள் இதில் இறந்தனர். சில செய்தியாளர்களின் படி திருப்பித்தாக்கும் நிலையை புலிகள் எடுத்தனர்: அதில் வெற்றியும் கண்டனர்.

இதில் பெரிய இராணுவ முக்கியத்துவம் எதுவும் கிடையாது. முதல் இரண்டு நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக எடுக்கப்பட்ட இசை திருப்பும் நடவடிக்கையே இது.

மேற்கண்டவையே அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்ட காரணங்கள்.

### தாக்குதல்

கோட்டை முகாமை போராளிகள் ரொக்கட், மோட்டோ, ஏகே 47 துப்பாக்கிகளினுல் தாக்கினர்.

அத்தாக்குதலில் இருந்து துருப்புக்களைப் பாதுகாப்பதற்காக இராணுவம் சைபி மார்செட்டி விமானங்கள், துப்பாக்கி பொருத்தப்பட்ட ஹெலிக்கொப்டர்கள் ஆகியவற்றின் ஆகாயப் பாதுகாப்பு வழங்கினர்.

அச்சமயங்களில் இராணுவ கேந்திர நிலையங்கள் அல்லாத நகரப் புறங்களில் இடம் பெற்ற விமானக் குண்டுத் தாக்குதல்கள், ஹெலிக்கொப்டர் தாக்குதல்கள் தான் உலகப் பத்திரிகைகளின் கவனத்தை ஈர்த்தன.

இதுதான் இந்தியாவுக்குக் கோபத்தை ஏற்படுத்தியது.

கடந்த ஆண்டில்இருந்து வட பகுதியில் இராணுவ முட்டுக்கட்டை நிலவுவது இராணுவ விவகாரம் பற்றி படிக்கும் மாணவனுக்குக் கூடத்தெரியும் கோட்டையில் இருந்து சிப்பாய்களை போராளிகளை வெளியேற்ற முடியாது. வீதிகளில் இருந்து போராளிகளை சிப்பாய்களினுலும் வெளியேற்ற முடியாது.

கோட்டைக்குள் எந்த மூயிலேல் இருந்து பாடசாலை மாணவன் உசயோகிக்கும் பைனுக் குலரின் தலையுடன் பார்க்கும் எவருக்கும் மெஷின் துப்பாக்கிகளுடன் கூடிய போராளிகளின் 'சென்றி' நிலையங்களைக் காணலாம்.

(தொடரும்)

பொய்யாமொழி



குறள்:

அறனழீஇ அல்லவை செய்தலின் தீதே
புறனழீஇப் பொய்த்து நகை.

பொருள்:

அறத்தை அழித்துப்பேசி அறமல்லாதவைகளைச் செய்தலை விட, ஒருவன் இல்லாத விடத்தில் அவனைப் பழித்துப் பேசி நேரில் (பொய்யாக) [illegible] தீமையாகும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

IDPM Part I 21/6
Part II 23/6
North Ceylon Technical Institute
14, St. Peters Lane, Jaffna.
Tele; 24355

# உதயன்

19 – 06 – 1986 வியாழக்கிழமை

ICMA F.A. F.B. P.I P.II
AAT Prelim Inter
North Ceylon Technical Institute
14, St. Peters Lane, Jaffna.
Tele; 24355

## வித்தாரம்

என்ன தம்பி முரளி, சைக்கிளை விண் மண் தெரியாமல் ஓடிக் கொண்டு வாருய்? என்ன பாம்பு கலைச் சதோ அல்லது ஆமிக் காரர் ரவுணுக்கு வந்து விட்டினம் எண்டு ஆரும் கதை விட்டிட்டி னமோ ..?

என்ன,ரி வியிலே படம் ஓடப்போகுது. அதைப் பாக்கிறதுக்கு உப்பிடி ஓடிவாறீரோ! இந்தக் காலத்துப் பெடியள் பெட்டையளுக்குச் சாப் பாட்டை விட ரி. வி. தானே பிரதானம். "அன்பே பிரதானம்" எண்ட பழைய சினிமாப் பாட்டுக்குப் பதிலா 'ரி. வி.யேபிரதானம்' எண்டு பாடிஞல் வெகு பொருத் தமாய் இருக்கும்.

அதைவிடு. நீ படம் எண்டு சொன்ன உடனே சிங்கள வெள்ளித்திரைக் கதாநாயகன் விஜய குமாரணது நிகாவின் ஞாபகம்தான் வருகிறது. அதுவும் சந்தர்ப்ப சூழ் நிலையளை ஒட்டித் தான்.

ஏன் எண்டு உனக்குத் தெரியும் எண்டு நினைக்கி றேன். அவர்தான் இண் டைக்கு இந்தியாவுக்குப் போருர். சினிமாவிலே நடிக்கிறதுக்கு இல்லை யப்பா!

ஜே. ஆருக்குத் தாது வஞகப் போருர். இந்தி யாவிலே அதுவும் தமிழ் நாட்டிலே முதலமைச்சர் எம். ஜி. ஆர். டன் குட்டி இராமச்சந்திரன், கலைஞர் கருணுநிதி, போராளிகள் அமைப்புக ளின் தலைவர்கள், முக் கிய பிரமுகர்களைச் சந் தித்துப் பேசப்போருர்.

வன்செயலை விடுங்கோ, சமாதானமான ஒரு தீர் வுக்கு வருவோம் எண்டு ஜே. ஆர். சார்பிலே பேசப்போருர். யுத்த நிறுத்தம் செய்ய அரசு தயார். நீங்கள் ஒத்து வந்தால் அமைதியாகப் பேசி முடிக்கலாம் எண்டு ஏதேதோ எல்லாம் பேசு வாராம்,

கழுதை தேய்ந்து கட் டெறும்பானது எண்டு எங்கடை பெரிய வை பேச்சுவழக்கிலே சொல்லு வினம். அந்த நிலைக்கு எங்கடை இனப்பிரச்சினை வந்திட்டுது.

இடதுசாரித் தலைவர் களை அனுப்பித்தான் யுத்த நிறுத்தத்துக்கும், சமாதானத் தீர்வுக்குமா கப் போராளிகளுடன் பேசுவிக்கப்போறதாக அரசாங்கம் புழுகித் தள் ளிச்சு.

ஒரு இடதுசாரித் தலை வரும் அதுக்கு உடன் படயில்லை. உவர் விஜய குமாரணதுங்க இடதும் இல்லை வலதும் இல்லை எண்ட நிலை. சினிமா விலை இருந்தவர். சிறி மா வின்ரை மகளைக் கலி யாணம் முடிச்சார். அர சியல் குடும்பத்துக்கை போனதும் அந்த ஆசை வந்திட்டுது. மச்சான் அனுராவோடை சரிப் போகயில்லை. அரசிய லைத் தொடருறதுக்கு எங்கே ஒரு சந்தர்ப்பம் கிடைக்கும் எண்டு எதிர் பார்த்துக்கொண்டிருந்த ரி. பியைச் சேர்த்து ஒரு கட்சி தொடங்கிஞர்.

இப்ப அவர் ஜே. ஆருக்கு ஒரு நல்ல எடு பிடியா எத்துப்பட்டிருக் கிருர்


உதிலை பெரிய இரகசி யம் இருக்கு- நடிகரைத் தன்னேடை உள்ளுக் குள்ளை எடுத்துப் போட்டா இரண்டு காரி யங்களைச் சாதிக்கலாம் எண்டு பெரியவர் நினைக் கக்கூடும். சிறிமாவுக்கு ஒரு 'பாடம்' படிப்பிச்ச மாதிரி இருக்கும் அடுத் தது எதிர்க்கட்சியள் தன்னேடை நிக்குமாப் போலை வெளிஉலகத்துக் குக் காட்டிக் கொள்ள லாம்.

இன்னும் ஒரு கதை காதிலை விழுகுது. விஜய, இந்திய விஜயம் முடிஞ்சு வந்ததும் அவர் யு என். பியிலே சேர்ந்துவிடுவா ராம். அதாவது தமிழ் நாட்டைப் போய் பார் த்துவிட்டு வந்ததுக்குச் சன்மானமாக அது கிடைக்குமாம்.

சிலவேளை நடிகர் இந் தியா — இலங்கை சேர் ந்து கூட்டு புரடக்ஷஞ படம் எடுக்கிறதுக்க ஏதாவது வழிதுறை கண் டறியிறதுக்கும் இந்த சந்தர்ப்பத்தைப் பயன் படுத்துவார். ஆர் கண் டது எந்தப் பாம்பு எந்தப் புத்துக்குள்ளை எண்டு சொல்லக்கூடிய காலமே இது ..!?...!

கொண்டோடி

## ஓராண்டு நினைவாஞ்சலி



திரு. செல்லப்பா இராசா

அன்னைமடியில்: 10-06-1911

இறைவனடியில்: 29 06 1985

எம்மை விட்டுப் பிரி ந்து ஓராண்டு சென்று ம் உங்கள் நினைவு எம்மை விட்டு என்றும் நீங்காது. பாசமுடன் எம்மை வளர்த்து அன்னை யில்லாத குறையை நீக் கிய எம் அன்புத் தெய் வமே! என்றும் உங்கள் பிரிவால் வாடும்.

பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

## இன்று நாம் வெகுதூரம் வந்துவிட்டோம்

# சமஷ்டி ஆட்சி கூட

# காலம் கடந்த தீர்வு தான்

## யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் உரை

யாழ்ப்பாணம், ஜூன் 19

இலங்கை அரசு இன்று சமஷ்டி முறையை அமு லாக்க முன்வந்தால் கூட அது ஒரு காலம் கடந்த தீர்வாகவே அமையும். 1976 ஆம் ஆண்டில் வேண்டுமானுல்மாகாண சபை ஒரு நல்ல தீர் வாக அமைந்திருக்கும். இன்று நாம் வெகு தூரம் வந்து விட்டோம்.

யாழ்பல்கலைக்கழக வர லாற்றுத்துறை விரிவுரை யாளர் திரு மு. திரு நாவுக்கரசு மேற்கண்ட வாறு கூறிஞர்.

யாழ்பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் வணிக, புவியல் மாண வர் மன்றத்தினரின் ஆத ரவில் "தெற்காசியாவின் சூழலில் இலங்கை இனப் பிரச்சினை" என்ற தலைப் பில் நடைபெற்ற கருத் தரங்கில் திரு. திருநாவுக் கரசு பேசிஞர்.

பொருளியல் துறைத் தலைவர் கலாநிதி எஸ். நித்தியானந்தன் கருத் தரங்கிற்கு தலைமை வகித் தார்.

திரு திருநாவுக்கரசு தொடர்ந்து கூறியதா வது;-

இந்தியாவின் ராஜீயத் தொடர்புக்கு அமெரிக்க வல்லரசு கட்டுப்பட் டாக வேண்டும். இந்தி யாவை நாம் வென் றெடுப்போமா அல்லது இந்தியா நம்மை வென் றெடுக்குமா என்பதே தலையாய பிரச்சினை ஆகும்

இந்திய நாட்டின் ஐக் கியம் ஒருமைப்பாடு குன்றுமாஞல் தெற்காசி யப் பிராந்தியம் வல்ல ரசுகளின் வேட்டைக் காடாகும்.

இவ்வாறு திரு திரு நாவுக்கரசு குறிப்பிட் டார்

புவியியல் துறைத் தலை வர் கலாநிதி எஸ் பாலச் சந்திரன் திரு செந்தி வேல், கிளிநொச்சி உதவி திட்டமிடல் பணிப் பாளர் திரு. வி எஸ். சுவாமிநாதன் உட்படப் பலரும் கருத்துரை வழங் கிஞர்கள்.

(இ-9)

## கடலில் கைதானேரில் 20 பேர் விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 19

கடந்த ஏப்ரல் மாதத் தில் இரணைதீவுக் கட லில் வைத்து கடற்படை யினரால் கைது செய்யப் பட்ட 34 பேரில் 20பேர் இதுவரை விடுவிக்கப்பட் டுள்ளனர்.

இந்த 34 பேரும் இந் தியாவுக்கு அகதிகளாக செல்லுகையில் கைதா னது தெரிந்ததே

கைது செய்யப்பட்ட வர்களில் ஒரு பெண் சில நாட்களில் விடுதலை செய்யப்பட்டார். ஏனை யோர் முதலில் பயங்கர வாத தடுப்புச் சட்டத் தின் கீழ் விசாரணை செய்யப்பட்டனர்.

விசாரணையின் பின் னர் அவர்களுள் ஓர் இளைஞர் மேல் விசார ணைக்காக யாழ் கோட்டை முகாமுக்குக் கொண்டு செல்லப்பட் டார்.

மற்றைய 32 பேரும் சுங்கத் திணைக்களத்தி டம் மேல் விசாரணைக் குப் பாரப்படுத்தப்பட் டனர்.

சுங்கத் திணைக்கள விசாரணையின் பின் அவர் கள் அனைவரையும் விடு விக்க ஏற்பாடுகள் செய் யப்பட்டிருந்தன

சுங்கத் திணைக்களத் தின் தண்டனைப் பணத் தைச் செலுத்திய பின் னர் அவர்களில் 20 பேர் அவ்வப்பகுதி கிராம சேவகர் அளித்த உறு திப்பாட்டின் பின்னர் விடுவிக்கப்பட்டனர் ஏனைய 12 பேரும் கிராம சேவகர்களின் வரவை எதிர் நோக்கியுள்ளனர்.

(உ-5)

## மின்சார நிலுவை ரூபா 2 கோடி

கொழும்பு, ஜூன் 19

வடக்கு, கிழக்கு மாகா ணங்களில் உள்ள மின் சார பாவனையாளர்கள் இலங்கை மின்சார சபை க்கு 2 கோடி ரூபாவுக்கு மேல் செலுத்த வேண்டி யுள்ளதாம்.

இப்படி இலங்கை மின் சார சபை வட்டாரங் கள் கூறுகின்றன

(இ-எ-2)

## மூடப்பட்டிருந்த கடைகள் திறக்கப்பட்டன

யாழ்ப்பாணம், ஜூன் 19

கடந்த மூன்று மாதங் களாக யாழ்நகரில் மூடப் பட்டிருந்த மூன்று கடை கள் நேற்று மாலை ஐந்து மணி அளவில் கடை உரிமையாளர்களிஞல் திறக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் உள்ள சோமசுந்தரம் அன்கோ, அசோஷியட் மோட் டர்ஸ், நஷனல் மோட் டர்ஸ் ஆகியவையே இந்த மூன்று கடைகளும் ஆகும்.

யாழ் வர்த்தகர் சங் கம் எடுத்துக்கொண்ட பெரு முயற்சி காரண மாக சம்பந்தப்பட்டவர் களுடன் பேச்சுவார்த் தை நடத்தப்பட்டு சுமுகமான முறையில் பிரச்சினை தீர்த்து வைக் கப்பட்டது.

(இ-10)

## மன்னாரில்..

(1 ம் பக்கத் தொடர்ச்சி,)

திகள் ஏதும் செய்தி அச்சுக்குப் போகும்வரை கிடைக்கவில்லை.

போராளிகள் நவீனரக ஆயுதங்கள் கொண்டு தாக்கியதில் பல சிப்பாய் கள் காயமடைந்து உட னடியாக வைத்தியசாலை க்கு எடுத்துச் செல்லப் பட்டுள்ளனர்.

இதனிடையே போரா ளிகளின் தாக்குதல்களை அடுத்து சிப்பாய்கள் பொதுமக்கள்மீது தாக்கு தலை மேற்கொண்டனர் என்று கூறப்படுகிறது

ஏற்பட்ட உயிர், உடைமை இழப்புகள் பற்றிச் சரியான தகவல் கிடைக்கவில்லை.

சம்பவம் நடைபெற்ற இடத்தில் ஹெலிக்கொப் டர் ஒன்றும் தாக்குதல் நடத்தியதாகத் தெரிய வருகிறது. (2 - 10)

## இனக்கொலை---

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

துயரங்களை மட்டக் களப்பு, திருகோணமலை. முல்லைத்தீவு, வவுனியா கிளிநொச்சி, மன்னார் ஆகிய இடங்களில் வாழும் தமிழர்களும் முகங்கொடுக்கிருர்கள்

இவை பற்றித் தமிழ் மக்களின் சார்பில் பிர ஜைகள் குழுக்கள் போன்ற பல அமைப்புக் கள் ஜஞதிபதியின் கவ னத்துக்குக் கொண்டு வந்த போதிலும் எவ் வித பரிகாரமும் கிடைக் கவில்லை.

எனவே அரசின் இத்த கைய நடவடிக்கைகளைப் பார்க்கும்போது, அர சாங்கம் தமிழ் மக்களை அழிக்கத் திட்டமிட்டு உள்ளது என்பது தெளி வாகின்றது.

இந்த இக்கட்டான சூழ் நிலையில் தமிழ் இனத்துக்கு எதிரான இனப்படுகொலையில் இரு ந்து மக்களைக் காப்பாற் றும்படி ஐக்கிய நாடுகள் சபையைக் கோருவதை விட வேறு வழியில்லை.

இவ்வாறு ஆயர் கலா நிதி தியோகுப்பிள்ளை வலியுறுத்திஞர். (இ-9)

## வெள்ளி, சனி...

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)

விடுக்கப்பட்ட அறிக்கை ஒன்றில் யாழ் அரச அதி பர் திரு. வை. மு பஞ்ச லிங்கம் மேற்கண்ட தக வல்களை வெளியிட்டுள் ளார்.

கம்பியூட்டர் மூலம் தயாரிக்கப்பட்ட ஜூன் மாதப் பென்ஷன் பத்தி ரங்கள் கொழும்பில் இருந்து லொறி ஒன்றில் கொண்டுவரப்படுகையில் ஷெல் தாக்குதல் காரண மாக லொறியுடன் கிளி நொச்சியில் வைத்து எரிந்து சம்பரானது தெரிந்ததே.

அதைத் தொடர்ந்து ஜூன் மாதம் பென்ஷன் வழங்குவது தாமதமா னது.

இருந்தும் யாழ் அரச அதிபர் எடுத்த தீவிர முயற்சி காரணமாக மீண்டும் கம்பியூட்டர் மூலம் பென்ஷன் பத்தி ரங்கள் கொழும்பில் இருந்து பெறப்பட்டு கொடுப்பனவு நிலையங் களுக்கு அனுப்பிவைக்கப் பட்டு உள்ளன.

யாழ் அரச அதிபர் இது சம்பந்தமான அறிக் கையில் மேலும் தெரி வித்திருப்பதாவது;

ஏற்கனவே அறிவிக்கப் பட்ட ஜூன் மாத பென் ஷன் பற்றுச் சீட்டுக்கள் பென்ஷன்காரரின் தனிப் பட்ட விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்பட மாட்டா கால தாமதத் தைத் தவிர் பதற்காக அவை வங்கி முகாமை யாளரிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளன

ஆகவே பென்ஷன் காரர்கள், வங்கி முகா மையாளரிடம் நேரடியா கப் பெற்று பூர்த்தி செய்து வங்கியில் ஒப் படைக்க வேண்டும்.

இப்படி அரச அதிபர் கூறியுள்ளார்.

(இ-எ-5)

## தென்னில...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

அறியப்படுகிறது.

பிலிப்பீன்ஸில் மார் கோஸின் அரசாங்கத் தைக் கவிழ்க்க திருமதி அக்கியுனே நடத்திய தெரு ஆர்ப்பாட்டப் பாணியிலேயே,சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் போராட்டமும் அமை யும் என்று அந்தக் கட் சியுடன் நெருங்கிய வட் டாரங்களில் இருந்து தெரியவந்தது.

(அ-1)

## காங்கேசனில்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தடை விதிக்கப்பட்டுள் ளது.

அண்மையில் காங்கே சன் துறைமுகத்தில் இருந்து சிமெந்து ஏற்றிச் சென்ற தைவான் கப்பல் ஒன்று 8 நாள் 'மர்ம' மறைவின் பின்னர் கொழும்பு சென்றது.

அதனிடையில் அந்தக் கப்பலில் குண்டு வைக் கப்பட்டிருப்பதாக கொழும்புக்குத் தகவல் கிடைத்தது.

நடுக்கடலில் வைத்து அக்கப்பல் பரிசோதனை செய்யப்பட்ட பிறகே துறைமுகத்திஞள் கப் பலை அதிகாரிகள் அனு மதித்தனர்.

அதைத் தொடர்ந்தே புதிய நிபந்தனை நடை முறைக்கு வந்துள்ளது.

(இ-எ-2)

## விளையாட்டரங்கு

### உலகக் கிண்ணப்போட்டி:

# இத்தாலி அணி அவுட்!

## பிரான்ஸிடம் கோட்டை விட்டது

மெக்ஸிக்கோ ஜூன் 18

தற்போது மெக்ஸிக் கோவில் நடைபெற்று வரும் உலகக் கிண்ண உதைபந்தாட்ட சுற் றுப் போட்டியின் கால் இறுதியாட்டத்திற்குக் கூடத் தெரிவு செய்யப் படாத நிலையில் இத்தாலி அணி சுற்றுப் போட்டி யிலிருந்து 'அவுட்' ஆகி யது.

கடைசியாக நடை பெற்ற போட்டிகளில் சாம்பியன்களாகி உலகக் கிண்ணத்தை தம்முடன் தக்க வைத்துக் கொண்ட இத்தாலி அணி,

அடுத்த சுற்றுப் போட் டியில் இரண்டாம் சுற்று ஆட்டங்களிலேயே உலக க்கிண்ணத்தைக் கோட் டைவிட்டது உலக உதைபந்தாட்ட ரசிகர் கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியையும் ஆச்சரி யத்தையும் ஏற்படுத்தியி ருக்கிறது.

செவ்வாய்க்கிழமை பிரான்ஸ் அணியுடன் நடைபெற்ற ஆட்டத்தில் 2 - 0 என்ற கோல் கணக் கில் தோற்றுப்போனதன் மூலம் போட்டியில் முன் னேறும் தகுதியை இத் தாலி அணி இழந்தது

இந்த ஆட்டம் ஆரம் பம் முதல் இறுதிவரை பிரான்ஸ் அணிக்கு சாரி பாக இருந்தது.

பலம்வாய்ந்த முறையில் பிரான்ஸ் வீரர்கள் இத் தாலி அணிக்கு எதிராக விளையாடிஞர்கள்

இந்த ஆட்டத்திலிருந்து கால் இறுதியாட்டத்தி ற்கு தெரிவாகியிருக்கும் பிரான்ஸ் அணி, எதிர் வரும் 21 ஆம் திகதி பலம் வாய்ந்த பிரேஸில் அணியுடன் மோதும்.

இதேவேளை மற்றெரு இரண்டாவது சுற்று ஆட் டத்தில் மேற்கு ஜேர்மனி மெருக்கோ அணியை 1—0 என்ற கோல் கணக் கில் தோற்கடித்து கால் இறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றது.

ஆட்டம் முடிவடைவ தற்கு இரண்டு நிமிடங் கள் இருக்கையில் மேற்கு ஜேர்மன் அணி தனது வெற்றிக்கு வழிவகுத்த கோலைப் போட்டது குறிப்பிடத் தக்கது. (உ)

### மென்பந்து கிரிக்கெட்

## சில்வர் ஸ்ரார்ஸ் சுற்றுக்கிண்ணம்; 44 கழக அணிகள் மோதுகின்றன

யாழ்ப்பாணம், ஜூன்19

'சில்வர் ஸ்ரார்ஸ் சுற் றுக் கிண்ணத்திற்கான மென்பந்து கிரிக்கெட் போட்டிகள் கடந்த ஞாயிறன்று ஆரம்பமா யின.

முதலாவது போட்டி யில் சுழிபுரம் ஸ்ரீகாந்த் விளையாட்டுக் கழகம் கொக்குவில் பொற்பதி விளையாட்டுக் கழகத்தை வென்றது.

முதலில் துடுப்பெடுத் தாடிய ஸ்ரீகாந்த் அணி 19.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழ ந்து 71 ஓட்டங்களைப் பெற்றது.

தொடர்ந்து துடுப்பெடு த்தாடிய பொற்பதி அணி 14.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழ ந்து 37 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

இரண்டாவது ஆண் டாக நடைபெறும் இந்த நொக் அவுட் முறையி லான கிரிக்கெட் போட் டியை யாழ்ப்பாணம் சில் வர் ஸ்ரார்ஸ் விளையாட் டுக் கழகம் நடத்துகிறது.

11 பேர் பங்கு கொள் ளும் 20 ஓவர்களைக் கொண்ட இந்தப் போட் டியில் யாழ்நகரில் என்று மில்லாதவாறு 44 விளை யாட்டுக் கழகஅணிகள் மோதுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது (உ-7)

## தமிழரு" ...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

பேட்டிகண்டார்.

அப்பேட்டியில் டாக் டர் நீலன் மேலும் சொன்னதாவது:

கொழும்பில் அடிக்கடி குண்டு வெடிப்புகள் இடம்பெற்றன அதைத் தொடர்ந்து அரச அலு வலகங்களில் பணிபுரிந்து வந்த தமிழ் ஊழியர்கள் இடைநிறுத்தம் செய் யப்பட்டனர். கட்டாய விடுமுறையில் வீட்டுக்கு அனுப்பப்பட்டனர்.

இந்த நடவடிக்கைக ளுக்கு சிங்கள சகாக் களோ, எதிர்க் கட்சி களோ, பத்திரிகைகளோ எதிர்ப்புத் தெரிவிக்க வில்லை.

இலங்கை சுதந்திர நாடு அனைவருக்கும் சொந்தமானது. இப் படி ஒரு சிலரால்தான் ஏற்றுக்கொள்ளப்பட் டுள்ளது.

நடக்கும் சம்பவங்க ளைப் பார்த்தால் தமிழ ரும் சிங்களவரும் இனி ஒருமித்து வழிநடக்க முடியாது என்றே எண் ணத்தோன்றுகின்றது.

இப்படி டாக்டர்நீலன் திருச்செல்வம் சொன்ன தாக லண்டன் ஒப்சே வர் செய்தி வெளி யிட்டது. (உ-எ-2)

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## முதலாவது பிறந்ததின வாழ்த்து



செல்வி சாருஜீ

புளியங்கூடலைச் சேர்ந்த சிவகுமாரன் வசந்தா தம்பதிகளின் செல்வப்புதல்வி சாருஜீ தனது முதலாவது பிறந்தநாளை 19-06-86 இன்று அவரது இல்லத்தில் சிறப் பாக கொண்டாடுகிருர். இவரை அப்பா, அம்மா, அம்மம்மா, அப்பப்பா, அம்மப்பா, அப்பம்மா, மாமாமார், மாமிமார், சித்தப் பாமார், சித்திமார், மச்சான்மார், மச்சாள் மார், உற்ருர், உறவினர், நண்பர்கள் ஆகி யோர் பல்கலைகளையும் கற்று சீரும் சிறப்புட னும் நீடுழி வாழ வாழ்த்துகின்றனர்.

## தேவை

* காசாளர் (Cashier)
* எழுதுவினைஞர் / கணக்குப் பரிசோதகர் (Clerk / Auditor)
* கணக்குப் பதிவாளர் (Book-Keeper)

கணக்கியல் துறையில் 5 வருட அனுபவ மும், கணக்குப் பரிசோதனையில் பரிட்சயமும் அவசியம்.

25-06-1986க்கு முன் விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:

த.பெ. இல: 23,
யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 19—6—1986
Printed and Published by Uthayan Publications (Private) Ltd 15, Second Lane Power House Road JAFFNA. Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka, under Number Q J 60 NE-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org